மதிப்பிற்குரிய இந்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சக உறுப்பினர்களுக்கு,

மதிப்பிற்குரிய இந்திய அரசாங்கத்தின் கலாச்சார அமைச்சக உறுப்பினர்களுக்கு,

மதிப்பிற்குரிய யூனெஸ்கோவின் தலைமை இயக்குநர் செல்வி. ஆட்ரே அசோலே அவர்களுக்கு,

மதிப்பிற்குரிய யூனெஸ்கோவின் நிரந்தர பிரதிநிதியான திரு. விஷால் V.ஷர்மா அவர்களுக்கு,

மதிப்பிற்குரிய யூனெஸ்கோ பொதுச் சபைக்கு,

மதிப்பிற்குரிய யூனெஸ்கோ அமர்வுகளுக்கு,

(நகல்: ஆரோவில் அறக்கட்டளையின் குடியிருப்பாளர்கள் பேரவையின் செயற்குழு)

<u>30 செப்டம்பர் 2022ல் யூனெஸ்கோவின் ஸ்ரீ அரவிந்தரின் 150வது ஆண்டு விழா நிகழ்ச்சியை குறித்து</u>

முதன்மையாக ஆரோவில் அறக்கட்டளையின் குடியிருப்பாளர்கள் பேரவையின் சார்பிலும், ஆரோவில்லின் நீண்ட கால நண்பர்கள் மற்றும் நலம் விரும்பிகளின் சார்பாகவும் 1968 முதலே ஆரோவில்லை ஆதரித்து வரும் யூனெஸ்கோவிற்கு எங்கள் உளமார்ந்த நன்றியுணர்வை தெரிவித்துக் கொள்கிறோம். 1966 முதல் தென்னிந்தியாவில் உருவாக்கப்பட்டு வரும் இந்த சர்வதேச நகரத்தை ஆதரித்து யூனெஸ்கோ 5 தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. இந்த ஆதரவு ஆரோவில்லுக்கு மிகவும் முக்கியமானவை ஆகும். மேலும் மனித நிலையின் பரினாம வளர்ச்சிக்கான பொருள் மற்றும் ஆன்மீகம் சார்ந்த ஒரு ஆய்வை அடிப்படையாக கொண்ட இத்தகைய ஒரு புதிய முயற்சியான இந்த நகரத்திற்கு இடமளித்திருக்கும் இந்திய நாட்டிற்கும் எங்கள் ஆழ்ந்த நன்றிகளை தெரிவிக்கிறோம்.

கடந்த 54 வருடங்களில் வன மீட்சி, நிலையான கட்டிடக்கலைகள், புதுப்பிக்கத்தக்க வல்ல ஆற்றல் தொழில்நுட்பங்கள், புதுமையான உழவு முறைகள், பங்கேற்பு முறையிலான ஜனநாயக அமைப்பு முறைகள், ஒருங்கிணைந்த கல்வி, கலை மற்றும் கலாச்சாரம், கூட்டுப் பொருளாதார நிர்வாகம், ஆண் பெண் சமத்துவம், கிராமப்புற வளர்ச்சிகள், முரண்பாடுகளின் தீர்வுகள், சமூக நிறுவனங்கள், மறுசுழற்சி மற்றும் திடக் கழிவு மேலான்மை மற்றும் மழை நேர் சேகரிப்பு போன்ற பல்வேறு

துறைகளில் படைத்த சாதனைகள் மூலம் ஆரோவில் உலகளவில் சிறப்பு பெற்று விளங்குகிறது.
இந்த துறைகளில் எங்கள் செயல்கள் அனைத்தும் ஸ்ரீ அரவிந்தரின் வழிகாட்டுதல்களுக்கு இணங்க ஆரோவில் சாசனத்தின்படி: 'வேற்றுமையில் மனித ஒற்றுமை' (பிற்சேர்க்கை எண் 1) என்கிற இலக்கை அடைவதற்கான எங்கள் முயற்சிகள் ஆகும்.

ஆனால் இன்று ஆரோவில் குடியிருப்பாளர்களாகிய நாங்கள் இத்தகைய நீண்டகால முயற்சிகளும் சாதனைகளும் பெரும் அபாயத்தில் உள்ளன என்று முறையிடுகிறோம். கல்வித்துறை அமைச்சகத்தால் ஜூலை 2021ல் ஆரோவில் அறக்கட்டளையின் செயலாளராக டா.ஜெயந்தி ரவி நியமிக்கப்பட்டது மற்றும் அதைத் தொடர்ந்து ஆரோவில் அறக்கட்டளையின் புதிய ஆளும் குழு அமைக்கப்பட்டதிலிருந்து ஆரோவில் குடியிருப்பாளர்கள் இந்த சமூகத்தின் ஒற்றுமை குலையும்படியான வன்முறைகள், அச்சுறுத்தல்கள் மற்றும் பல தூண்டுதல்களை தொடர்ந்து சந்தித்து வருகின்றனர். இத்தகைய கடுமையான அடக்குமுறையான அழுத்தங்கள் ஆரோவில்லின் மையமான மதிப்புகள், ஸ்ரீ அரவிந்தரின் வழிமுறைகள் மற்றும் தத்துவங்கள் மேலும் நமது இலக்குகள் இலட்சியங்கள் ஆகியவற்றிற்கு பெரும் அச்சுறுத்தல்கள் ஆகும்.

ஸ்ரீ அரவிந்தரின் நினைவு நாளான டிசம்பர் 5, 2021 அன்று முன்னறிவிப்பின்றி அங்கீகரிக்கப்படாத முறையில் நள்ளிரவில் ஆரோவில் வனத்தை அழித்தில் தொடங்கி கடந்த 10 மாதங்களில் சூழ்நிலை பெருமளவில் தீவிரமாகியிருக்கிறது. இந்நிகழ்வைத் தெடர்ந்து சில வாரங்களிலேயே ஆரோவில் இளைஞர்கள் மையத்தில் இருந்த சில கட்டிடங்கள் இடிக்கப்பட்டு அரிதான மற்றும் அருகிவரும் வகை மரங்கள் உட்பட சுமார் 900 மரங்கள் அகற்றப்பட்டன. இதைத் தொடர்ந்து ஆரோவில் குடியிருப்பாளர்கள் பேச்சுரிமை மற்றும் மனித உரிமைகளை பறிக்கும் வகையில் ஆரோவில் நிர்வாக அமைப்புகள் மற்றும் அதன் உள்தொடர்பு தளங்கள் ஆகியவை கையகப்படுத்தப்பட்டன. மேலும் டா.ஜெயந்தி ரவி மற்றும் அவரின் ஆதரவாளர்கள், நீண்ட காலமாக செயல்முறையில் இருக்கும் ஆரோவில் சமூகத்தின் ஜனநாயக முடிவு முறைகளைத் தொடர்ந்து மறுத்து வருகின்றனர்.

மெட்ராஸ் உயர்நீதி மன்றம் மற்றும் தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் இருந்து வந்த ஆணைகள் ஆரோவில்லின் சுற்றுச்சூழல் பணிகளின் முக்கியத்துவம் மற்றும் 1988ல் இந்தியா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஆணையில் பொதிந்துள்ள அதிகாரமான குடியிருப்பாளர்கள் பேரவையின் அதிகாரத்தை நிலைநிறுத்தும் வகையில்

இருக்கின்றன. ஆனால் ஆரோவில் அறக்கட்டளையின் செயலாளர் இந்த நீதிமன்ற ஆணைகளை எதிர்த்து மேல்முறையீடு செய்துள்ளார். இந்த சமூகத்தின் கட்டிடங்கள் கட்டுமானங்கள் மற்றும் வனங்களை அழித்தல் மேலும் முக்கியமான கூட்டு நிர்வாக முறைகளை கையகப்படுத்தும் முயற்சிகள் தொடர்ந்து வருகின்றன.
ஆரோவில் அறக்கட்டளையின் செயலாளர் மற்றும் அவரின் ஆதரவாளர்களின் நடவடிக்கைகளை தீவிரமாக கண்டிக்கும் வகையில் 97% குடியிருப்பாளர்கள் வாக்களித்திருக்கும் அண்மையில் நடந்த குடியிருப்பாளர்கள் பேரவை முடிவு முறையின் பெரிய அளவிலான முடிவுகளை பிற்சேர்க்கை எண் 2ல் காணவும்.

இதனால் கீழே கையொப்பமிட்டுள்ள குடியிருப்பாளர்களும் ஆரோவில்லின் நலம் விரும்பிகளும் ஆகிய நாங்கள் ஆரோவில் அறக்கட்டளை செயலாளரால் அறக்கட்டளையின் மூன்று அதிகாரப்பூர்வ அமைப்புகளில் ஒன்றான குடியிருப்பாளர்கள் பேரவையுடன் ஆலோசிக்காமல் ஒருதலைப்பட்சமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பேச்சாளர்களைக் கொண்டு செப்டம்பர் 30, 2022 அன்று யூனெஸ்கோவில் நிகழவிருக்கும் ஸ்ரீ அரவிந்தரின் 150வது ஆண்டுவிழா நிகழ்ச்சி குறித்த எங்கள் கவலையை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆகையால் இந்திய அரசாங்கத்தின் கல்வி மற்றும் கலாச்சாரத் துறை அமைச்சகங்களுக்கு இந்த நிகழ்ச்சியின் திட்டத்தை ஆரோவில் குடியிருப்பாளர்கள் பேரவையின் சார்பாக அவர்கள் கருத்துக்களை பகிரும் வகையிலான பேச்சாளர்களை உள்ளடக்கும் வகையில் மாற்றியமைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இப்போது திட்டமிட்டுள்ளபடி இந்த நிகழ்ச்சியை யூனெஸ்கோ நடத்துவது உங்கள் நிறுவனத்தால் உறுதியாக நிலைநாட்டப்பட்டது வரும் ஜனநாயக மதிப்புகளுக்கு எதிரான வகையில் அமைந்து விடும் என்பதை கருத்தில் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

உண்மையுடன்

27.09.2022

-ஆரோவில் அறக்கட்டளையின் குடியிருப்பாளர்கள் பேரவையின் உறுப்பினர்கள்

-ஆரோவில்லின் நீண்ட கால நண்பர்கள் மற்றும் நலம் விரும்பிகள்

[SIGNATURES]

தகவலுக்கு: build.auroville.together@gmail.com

குறிப்புகள்:

**இணைய தளங்கள்:**
https://auroville.media/summary-of-the-current-crisis
https://standforaurovilleunity.com

57,000த்திற்கும் மேற்பட்டோர் கையொப்பமிட்ட change.org இணைய பிரச்சாரம்:
https://www .change.org/sosauroville

Appendix.1

## பிற்சேர்க்கை எண் 1

## ஆரோவில் சாசனம்

**1.** ஆரோவில் குறிப்பிட்ட எவருக்கும் சொந்தமானது அல்ல. ஆரோவில் மனித இனம் முழுவதற்கும் சொந்தமானது ஆகும். ஆனால், ஆரோவில்லில் வசிக்க வேண்டும் என்று ஒருவர் விரும்பினால், அவர் தெய்வீக உணர்விற்கு விருப்பத்துடன் தொண்டு செய்பவராக இருக்கவேண்டும்.

**2.** ஆரோவில் முடிவுறாத கல்வி, இடையறாத முன்னேற்றம், மூப்புறாத இளமை ஆகியவற்றின் இருப்பிடமாக விளங்கும்.

**3.** ஆரோவில் சென்ற காலத்திற்கும், வருங்காலத்திற்கும் இடையே ஒரு பாலமாக இருக்க விழைகிறது. புற உலக, அக உலகக் கண்டுபிடிப்புகள் அனைத்தையும் பயன்படுத்தியபடி ஆரோவில்லானது துணிவுடன் எதிர்கால நன்முடிவுகளை நோக்கித் துடிப்புடன் முகிழ்த்து எழும்.

**4.** ஆரோவில் மனிதகுல ஒருமைபாட்டிற்கு ஓர் உருவம் கொடுப்பதற்கான உலகியல் மற்றும் ஆன்மிக ஆராய்ச்சிகளுக்குரிய நிலையமாக விளங்கும்.

## பிற்சேர்க்கை எண் 2

## குடியிருப்பாளர்கள் பேரவை முடிவு முறை(RAD)யின் முடிவுகள்

18.8.2022 - 22.8.2022

கீழே கொடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தை நிறைவேற்ற குடியிருப்பாளர்கள் பேரவையின் செயற்குழுவால் அழைக்கப்பட்ட அவசரகால முடிவு முறை (RAD)ன் முடிவுகள் இதோ. தீர்மானத்தின் சுருக்கம் பின்வருமாறு:

"ஆரோவில் அறக்கட்டளையின் குடியிருப்பாளர்கள் பேரவையின் உறுப்பினர்களாகிய நாங்கள்,
செயலாளர் அலுவலகத்தால் அளிக்கப்பட ஆணைகள் (அலுவலக ஆணை, நிலையியற் கட்டளை மற்றும் எந்தவகையாலான ஆணைகள்) மற்றும் அவரால் நியமிக்கப்பட்டவர்கள் போன்ற எதுவும் குடியிருப்பாளர்களுடன் இணைந்தோ கலந்து ஆலோசித்தோ செய்யப்பட்டவை அல்ல என்று மேதகு மெட்ராஸ் உயர்நீதி மன்றம் உறுதிப்படுத்தி இருப்பதையும், மேலும் குடியிருப்பாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்ட குழுக்களுக்கு எங்கள் ஆதரவையும் உறுதிப்படுத்தும் இந்த தீர்மானத்தை நிறைவேற்ற ஆரோவில் அறக்கட்டளையின் அதிகாரப்பூர்வ அமைப்புகளில் ஒன்றான முறையில் ஒப்புக்கொள்கிறோம்.”




**97% (1122)** பேர் மேலுள்ள தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தனர்

**1% (10)** பேர் அதை நிராகரித்தனர்

**2% (29)** பேர் வாக்களிக்கவில்லை

இணையம் மற்றும் நேரடியாக மொத்தம் 1161 செல்லும் வாக்குகள் பதிவு செய்யப்பட்டன. வாக்காளர் பங்கேற்ப்பின் மொத்த எண்ணிக்கை முடிவை உறுதி செய்யத் தேவையான 10 சதவிகிதம் வாக்குகளை தாண்டியுள்ளது.
[இணைக்கப்பட்டுள்ள ஆவணம் 2ஐ பார்க்கவும்]